நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 23 ( 05 - 05 - 1992 ) செவ்வாய்க்கிழமை ஓசை 77

## குளிர்பானம் சிலவற்றில் பெருமளவு சர்க்கரின் கலப்பு

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் சில குளிர்பானங்களில் சர்க்கரின் கலந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது உணவு மருந்துக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் சர்க்கரினைச் மசயற்கை இனிப்பூட்டியாக உணவுடன் கலப்பது கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் சர்க்கரின் இனிப்பூட்டி செவின்ஸ்டார் (SEVEN STAR) என்ற வியாபாரப் பெயரில் விற்பனையாகும் கோர்டியல், மற்றொரு நிறுவனத்தின் தயாரிப்பான ஒறேஞ் மிஸ்ட் ஆகிய குளிர்பானங்களில் கலந்திருப்பதை மேலதிகப் பகுப்பாய்வாளர் செல்வி ஹேமலதா உறுதிப்படுத்தியுள்ளார். வின்ரோ என்ற மற்றொரு குளிர்பானத்தில் சீனிக்குப் பதிலாக சர்க்கரின் தாராளமாகக் கலக்கப்பட்டிருப்பதாக [4ஆம் பக்கம் பாக்க]

# தமிழக மக்களின் இதயங்களிலிருந்து பிரபாகரனை பிரித்துவிட முடியாது

## 25 தமிழ் இளைஞர்கள் வவுனியா நகரில் கைது

(வவுனியா)

வவுனியா நகரில் கடந்த இரண்டு தினங்களில் 25 தமிழ் இளைஞர்கள் சிறிலங்கா பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

வவுனியா நகருக்குள் நடமாடுவதற்குத் தேவையான அனுமதிஅட்டை இல்லைஎன்ற குற்றச் சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால் அவர்கள் வைத்திருந்த அனுமதி அட்டையை பொலிசார் வாங்கி கிழித்து வீசிவிட்டு அனுமதி அட்டை இல்லை எனக் கூறி இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த இரு தினங்களாக தாண்டிக்குளம் சோதனை நிலையத்தில் இளைஞர்களும், பெண்களும் தாக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் சம்பவம்

## நாடு திரும்பிய அகதிகள் இராணுவத்தால் கைது

(வவுனியா)

தமிழ் நாட்டிலிருந்து இலங்கைதிரும்பிய தமிழ்அகதிகளில் இருவர் வவுனியா பகுதியில் வைத்து இராணுவத்தால் கைது செய்யப் பட்டுள்ளனர்

இவராசா குகனேஸ்வரன்என்பவர் கடந்த மாதம் 15 ஆம் திகதி வேப்பம்குளம் அகதி முகாமில் வைத்தும் கதிரேசன் நவநீதன் என்பவர் கடந்த மாதம் 27 ஆம் திகதி வவுனியா தபால் கந்தோரினுள் வைத்தும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நவநீதன் என்பவர் முன்னர் தபால் திணைக்களத்தில் சிற்றூழியராக கடமைபுரிந்தவரெனவும். தனது வேலை தொடர்பாக விண்ணப்பிக்க சென்றபோதே கைது செய்யப் பட்டார் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

## வட-கிழக்கு இணைப்பு

## இந்திய முயற்சி தோல்வியில் முடியும் தமிழர் இயக்க தலைவர் நெடுமாறன்

(லண்டன்)

"பிரித்தானிய ஏகாதிபத்தியம் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் மீது கொலைக்குற்றம் சாட்டி அவரை இழிவுபடுத்தியபோதும் இந்திய மக்களின் இதயங்களிலிருந்து அவரைப் பிரித்துவிட முடியவில்லை. அதே போல பிரபாகரனையும் தமிழக மக்களின் இதயங்களிலிருந்து பிரித்து விடமுடியாது இம்முயற்சியில் இந்திய அரசு தோல்வியடைவது திண்ணம்" இவ்வாறு தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. ப. நெடுமாறன் லண்டனிலிருந்து வெளியாகும் ஆங்கில மாத இதழான 'தமிழ் நேசன்' பத்திரிகைக்கு வழங்கிய விசேட பேட்டியில் தெரிவித்துள்ளார்.



"ராஜீவ் காந்தி தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிட இந்திய அமைதிப் படையை அனுப்பி வைத்தார். ராஜீவின் இந்தத் தவறான அணுகுமுறை தோல்வியைச் சந்தித்தது. இந்திய ஆட்சிபீடத்திலுள்ளவர்கள் இந்த உண்மையை ஏற்றுக் கொண்டு தங்களது கொள்கையை மாற்றவேண்டும். ராஜீவ் காந்தியின் கொள்கையை தொடர்ந்து கடைப் பிடிப்பது, பழைய தவறுகளை மேலும் சிக்கலடையச் செய்யும். அப்படிச் செய்வது இந்தியாவினதும், தமிழீழத்தினதும் நலன்களைப் பெரிதும் பாதிக்கும். தமிழீழ மக்கள் இந்தியாவின் ஆதரவை வேண்டி நிற்கிறார்கள். இந்தியாவை நோக்கி அவர்கள் தமது நேசக்கரத்தை நீட்டுகிறார்கள். இந்த அன்புக்கரத்தை பற்றிக் கொள்ள இந்தியா தவறக்கூடாது." இவ்வாறு திரு. நெடுமாறன் இந்தப் பேட்டியில் தொடர்ந்து கூறினார்.

## கிழக்குமாகாணக் கொலைகள்

## கடன் மீளளிப்பு விபரங்கள் உள்ளே

தமிழீழ மீட்பு நிதி மீளளிப்பு பெறும் 536 பேரின் விபரங்கள் உள்ளே வெளியாகியுள்ளன. உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக இவ் விபரங்கள் இடம் பெற்றுள்ளன.

## பிரேமாவை கொலை செய்ய சதியாம்

(கொழும்பு)

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவைப் படுகொலை செய்யச் சதித்திட்டம்தீட்டப்பட்டிருப்பதான செய்தி குறித்து அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டுவருவதாக டெய்லி ஒப்சோவர் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியைக் கடத்திச் செல்ல, படுகொலை செய்ய அல்லது அவர் மீது திராவகம் வீச இச் சக்திகள் திட்டமிட்டதாகச் சொல்லப்படுகிறது.

## அலுவலகம் திறப்பு

மாகாண ரீதியாக அதிகார பரவலாக்கம் செய்யப்பட் [4 ஆம் பக்கம் பாரிக்க]

## வட-கிழக்கு மாகாணத்திற்கு இரு சுயாட்சி சபைகள்

(கொழும்பு)

வட மாகாணத்திற்கு ஒரு சபையும், கிழக்கு மாகாணத்திற்கு ஒரு சபையுமாக இரு சுயாட்சி சபைகளை நிறுவப் பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினைக்கான அதன் தீர்வுத்திட்டத்தில் அரசுக்கு விதந்துரைத்துள்ளது என்று சண்டே ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பூரணமான ஒரு பிரதேச தன்னாட்சியை விரும்பும் புலிகளுக்குப் பாராளுமன்றத்தெரிவுக்குழுவின் இந்த உத்தேசத் தீர்வுத் திட்டம் ஏற்புடைய திட்டமல்ல என்று அரசியல்

உத்தேசத் தீர்வுத் திட்டத்தில் இரு சுயாட்சி சபைகளின் கருமங்களை ஒன்றிணைப்பதற்காக தலைவரும், எதிர்க்கட்சித் தலைவரும் இடம் பெறும் ஒரு சபையும் உருவாகவுள்ளது.

பிரதான அரசியல் கட்சிகளான யு. என். பியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தைச் சமர்ப்பிக்காததால் தீர்வுத்திட்டம் ஒன்றைச்சமர்ப்பிக்குமாறுபாராளுமன்றத் தெரிவுக்குழு விடுத்த அழைப்பை விடுதலைப்புலிகள்

## சிங்கள கட்சிகள் எதிர்ப்பு தமிழ் குழுக்கள் ஒதுங்கும்?

வடக்கு - கிழக்கு இணைப்பு இன்றிஇனப்பிரச்சினை தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டால் இன்றைய தீர்வு முயற்சிகளிலிருந்து ஒதுங்கிக்கொள்ள கொழும்பிலுள்ளதமிழ்க்குழுக்கள் ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள அரசியல் கட்சிகள் வடக்கு - கிழக்கு இணைப்பை எதிர்க்க தீர்மானித்திருப்பதாகவும் இணைப்பு விடயத்தில் இக் கட்சிகள் தம்முடன் ஒத்துழைக்காது விட்டால் தொடர்ந்து சமாதான முயற்சியில் ஈடுபடுவதில் பயனில்லை என இக் குழுக்கள் தெரிவித்துள்ளதாகவும் தெரிய வருகிறது

எனவே பாராளுமன்ற தெரிவுக் குழு இணைப்பை நிராகரித்தால் தொடர்ந்தும் சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதா என மீள் பரிசீலனை செய்யப் போவதாகவும் தெரிவித்துள்ளனர்.

### கடற்புலிகளால் நடாத்தப்பட்ட

## விளையாட்டுப் போட்டிகள் சிறப்புற ஆரம்பம்

(பருத்தித்துறை)

கடற் புலிகளால் நடாத்தப்படும் கடற் கரும்புலிகள் கப்டன் ஜெயந்தன், கப்டன் சிதம்பரம் ஞாபகார்த்த கடல் விளையாட்டுப் போட்டிகள் நேற்றுப் பருத்தித்துறை இறங்குதுறையில் சிறப்புற ஆரம்பமானது.

இவ்விளையாட்டுப்போட்டியின் சிறப்பு அம்சமாகக் கடற் புலிகளின் அணிவகுப்பு இடம்பெற்றது. இந்த அணிவகுப்பில் 50 கலிபர் துப்பாக்கிகள், இயந்திரத் துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட கடற்புலிகளின் சண்டைப் படகுகள் அணிவகுத்துச்சென்றன. இந்த அணிவகுப்பு நிகழ்ச்சியை நூற்றுக்கணக்கான மக்கள் ஆவலுடன் பார்த்து ரசித்தனர்.

பல்வேறு பகுதிகளிலுமிருந்து வந்த போட்டியாளர்கள் கலந்துகொண்ட விளையாட்

4] ஆம் பக்கம் பார்க்க]

## அரசின் திட்டமிட்ட செயல்

(லண்டன்)

கிழக்கு மாகாணக் கொலைகளை விடுதலைப் புலிகள் செய்தார்கள் என்பதில் உண்மையில்லை. இது அரசாங்கத்தின்மிகநுணுக்கமானதிட்டமிட்ட செயலாகத்தான் இருக்கின்றது என்று லோறன்ஸ் திலகர் பி. பி. சிக்கு நேற்றிரவு வழங்கிய பேட்டியொன்றில் தெரிவித்தார்.

பேட்டியில் மேலும் அவர் தெரிவித்திருப்பதாவது:

அரசாங்கம் களத்திலுள்ள இராணுவத் தளபதிக்கு இராணுவ நடவடிக்கைகள் பற்றித் தீர்மானம் எடுக்கும் அதிகாரங்களை வழங்கியபோதே இப்படியான படுகொலைகள் நடக்குமென்று எதிர்பார்த்தோம் தென்பகுதியில் கறுப்புப் பூனைகள் என்றும், கிழக்குப் பகுதியில் கருநாகங்கள் என்றும் சிறிலங்கா அரசாங்கம் முன்பு இப்படியான கொடுங் கொலைகளைச் செய்து அதை தமிழீழ விடுதலைப் புலிகள் மேலும் சுமத்தியது சகலரும் அறிந்த விஷயமாக இருக்கிறது—

அங்கு ஏராளமான ஊர் காவற் படையினரும், பொலிஸாரும் விடுதலைப் புலிகள் மீது எதிர்த்தாக்குதல் ஒன்றும் நடத்தாமல், விடுதலைப் புலிகள் அங்குள்ள பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தினர் என்பது எவரும் நம்பக்கூடியவிஷயமாகவுமில்லை.

சமாதான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கும் பொழுது அதில் முஸ்லிம் மக்கள் பங்காளராக இருக்கும் போது விடுதலைப் புலிகள் இத்தகைய தாக்குதல்களை முஸ்லிம் மக்கள் மீது நடத்தினார்கள் என்பது எதார்த்தத்திற்கும் முற்றிலும் மாறானதாக இருக்கின்றது;

கிராமப்புறங்களில் அரசு திட்டமிட்ட முறையில் தமிழ் போலிக் குழுக்களைக் கொண்டோ அல்லது தனது ஆயுதப் படையினரைப்பல்வேறு உருவங்களில் உருமாற்றம்செய்தோ இக் கொலைகளைச் செய்து அதேவேளையில் திட்டமிட்ட முறையில் வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் தனது ஒலி பரப்பு, செய்தி ஸ்தாபனம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளின் குரல் காலைச் சேவை

(யாழ்ப்பாணம்)

'புலிகளின் குரல்' ஒலி பரப்பு இன்றிலிருந்து காலைச்சேவையைஆரம்பிக்கின்றது. இச் சேவை காலை 6-30இல் இருந்து 7-00 மணி வரை இடம் பெறும். இச் சேவையில் 6-50 மணிக்கு செய்திகள் இடம் பெறும என தெரிவிக்கப்படுகிறது.

### கூட்டுறவு மொ.வி.நிலையம்

## உப உணவு இறக்குமதியை கைவிட முடிவு

(கொழும்பு)

வெங்காயம், மிளகாய், பருப்பு வகைகளின் ஏகபோக இறக்குமதி உரிமையைக் கைவிடக் கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம் முடிவு செய்துள்ளது. இதனால் மேற்படி நிறுவனத்தைச் சேர்ந்த ஊழியர்களும், இப் பொருள்களை உற்பத்தி செய்பவர்களும் பாதிக்கப் படுவார்கள் என்று அஞ்சப்படுகிறது.

கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம் வெங்காயம், மிளகாய் அறுவடைக் காலங்களில் இறக்குமதியைக் குறைத்து தோட்டக்காரர்களுக்குப் பாதுகாப்பு வழங்கி வந்துள்ளது. உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயம், மிளகாய் வகைகளைச் சேகரித்து சந்தைப் படுத்தியும் வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

திட்டமல்ல என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அழைப்பை விடுதலைப்புலிகள் நிராகரித்துள்ளனர் என்றும் சண்டே டைம்ஸ் கூறுகிறது.

## மரங்களைத் தறிப்பதால் விவசாயம் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

மா, பலா, வேம்பு, புளி, இலுப்பை போன்றமரங்களை விறகிற்குத்தறிப்பதால் சூழல் சமநிலை பாதிப்படையும். இதனால் மழைவீழ்ச்சிகுன்றி விவசாயமும் பாதிப்படையும். இதனை யாழ். மாவட்ட விவசாய ஆணைக்குழு ஆய்வு செய்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

கடந்த 30 ஆம் திகதி யாழ். செயலகத்தில் நடைபெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் இவ்வறிக்கை வெளியிடப்பட்டது. இக் கூட்டத்தில் கலந்து கொண்டு யாழ். அரச அதிபர் யாழ். மாவட்ட மக்கள் மரக் கன்றுகளை நட்டுவளம்படுத்த வேண்டும்எனவும் அதன்மூலம் நாம் சூழலின் சம நிலையை ஏற்படுத்தலாம் எனவும் தெரிவித்தார். (பா)

### பதுளை மாவட்டத்தில்

## காணாமல் போனோர்பற்றி பிரேமாவிடம் முறைப்பாடு

[கொழும்பு]

பதுளை மாவட்டத்திலிருந்து படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போயிருக்கும் தமிழ் இளைஞர்கள் பற்றிய தகவல்களை வெளியிடுமாறு இலங்கை தொழில் காங்கிரஸ் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசவை கேட்டுள்ளது.

பதுளை மாவட்டத்திலிருந்து சிறிலங்கா இராணுவத்தால்கைதுசெய்யப்பட்டபதின்னான்கு தமிழர் பற்றி தகவல் எதுவும் இல்லை எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## முஸ்லிம் காடையரால் கடத்தப்பட்ட தமிழ்ச் சிறுவன் தப்பி வந்தான்

(கொழும்பு)

வாழைச்சேனை காகித நகரில் கடத்தப்பட்ட 13 பேரை இராணுவத்தினர் தேடி வருகின்றனர் இக்கடத்தப்பட்டவர்களில் ஒரு சிறுவன் தப்பி வந்து காகித ஆலை இராணுவ முகாம் அதிகாரி மேஜர் விக்கிரமசிங்காவிடம் தகவல் தெரிவித்துள்ளான்.

காகித நகர் குடியிருப்பில் வசிக்கும் ஆறு பருவப்பெண்கள் ஒரு வயோதிபமாது, நான்கு சிறுவர்கள், இரண்டு சிறுமியர்கள் ஆகியோரே கடந்த புதன்கிழமை கடத்திச் செல்லப்பட்டனர்.

இதுபற்றி மேலும்தெரியவருவதாவது முத்துகல், அழிஞ்சிப் பொத்தானை ஆகிய கிராமங்களில் நடைபெற்ற படுகொலைச் சம்பவங்கள் தொடரீபாகவே மேற்படி சம்பவமும் நடைபெற்றுள்ளது. கடத்தப் பட்டவர்களில் ஒரு சிறுவன் வெட்டுக்காயங்களுடன் தப்பி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இந்தியப்படை வருகை தவிர்த்திருக்க கூடியதலையீடு

\- பிரேமா

(லண்டன்)

தவிர்த்திருக்கக் கூடிய வெளிநாட்டுத் தலையீடுபற்றி சுட்டிக் காட்டவே சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாச இந்திய அமைதிகாக்கும் படையைப்பற்றி கூறியதாகவும், அவமதிக்கும் நோக்கத்துடன் அல்ல எனவும் சிறிலங்கா வெளிவிவகார அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்திய இராணுவத்தை ஆக்கிரமிப்பு இராணும் என பிரேமதாச வர்ணித்ததாக வெளிவந்த செய்திகளையடுத்து இந்திய தூதுவருடாக கண்டனம் ஒன்றை இந்தியா அனுப்பிவைத்திருந்தமை தெரிந்ததே.

இதற்கு விளக்கமளிக்கும் வகையில் சிறிலங்கா வெளிவிவகார அதிகாரி ஒருவர் இவ்வாறு தெரிவித்தார். குறிப்பிட்ட விவகாரம் தொடர்பாக இராஜதந்திரரீதியில் செய்யப்பட்ட புகாரை இந்தியா பகிரங்கப் படுத்தியிருப்பதுதமக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# 536 தமிழீழ மீட்பு நிதி

## கடன் மீளப்பெறுவோர் விபரம்

### யா / யா

| தொடர்.இல. | தொடர்.இல |
|---|---|
| 91 | 167 |
| 195 | 334 |
| 458 | 632 |
| 940 | 1460 |
| 1959 | 4687 |
| 59 | 103 |
| 178 | 406 |
| 544 | 665 |
| 1248 | 3417 |
| 4141 | 4318 |
| 537 | 1370 |
| 1439 | 1828 |
| 3611 | 661 |
| 1204 | 3491 |
| 129 | 135 |
| 782 | 785 |
| 920 | 3216 |
| 72 | 111 |
| 141 | 4173 |
| 148 | 945 |
| 2949 | 83 |
| 879 | 4014 |

### யா / க

| தொடர். இல. | தொடர்.இல |
|---|---|
| 20 | 192 |
| 274 | 477 |
| 542 | 672 |
| 748 | 829 |
| 834 | 2345 |
| 27 | 128 |
| 134 | 874 |
| 920 | 2102 |
| 2295 | 2697 |
| 3263 | 4190 |
| 417 | 922 |
| 959 | 326 |
| 438 | 990 |
| 673 | 2689 |
| 4012 | 4285 |
| 4416 | 912 |
| 921 | 3649 |
| 4510 | 4904 |
| 139 | 208 |
| 4712 | 663 |
| 813 | 4164 |
| 381 | 4026 |
| 4727 | 301 |
| 914 | 4310 |

### யா / ந

| தொடர்.இல. | தொடர்.இல. |
|---|---|
| 262 | 452 |
| 861 | 1299 |
| 2430 | 2957 |
| 3447 | 3761 |
| 5605 | 5634 |
| 1281 | 3164 |
| 4548 | 4620 |
| 990 | 3268 |
| 4605 | 4851 |
| 871 | 1014 |

### யா / ச

| தொடர். இல | தொடர். இல |
|---|---|
| 26 | 731 |
| 1395 | 2541 |
| 221 | 3330 |
| 1524 | 1861 |
| 68 | 2951 |
| 4211 | 282 |
| 4001 | 1520 |
| 2133 | 4209 |
| 753 | 805 |
| 2532 | 4159 |
| 810 | 2095 |
| 1288 | 4015 |
| 954 | 4250 |
| 136 | 2142 |
| 15 | 168 |
| 686 | 1660 |
| 2003 | 3184 |
| 3769 | 4115 |
| 4222 | 53 |
| 93 | 94 |
| 251 | 563 |
| 2723 | 3189 |
| 3722 | 4635 |

### யா / வே

| தொடர்.இல | தொடர். இல |
|---|---|
| 176 | 218 |
| 1284 | 1771 |
| 1887 | 87 |
| 312 | 829 |
| 1503 | 1981 |
| 54 | 954 |
| 587 | 1128 |
| 189 | 04 |
| 03 | 53 |
| 222 | 458 |

### யா / மா

| தொடர். இல | தொடர். இல |
|---|---|
| 14 | 119 |
| 479 | 1702 |
| 3292 | 3714 |
| 749 | 1339 |
| 2834 | 3400 |
| 3667 | 3707 |
| 145 | 373 |
| 207 | 257 |
| 354 | 98 |
| 391 | 1086 |
| 1808 | 1924 |
| 100 | 1127 |
| 1645 | 337 |
| 1612 | 3242 |
| 465 | 3169 |
| 278 | 535 |
| 3076 | 401 |
| 705 | 485 |
| 2391 | 3472 |
| 349 | 268 |
| 2105 | 751 |

### யா/வ. இ

### யா / உ

| தொடர்.இல. | தொடர்.இல. |
|---|---|
| 11 | 47 |
| 91 | 175 |
| 3026 | 01 |
| 501 | 659 |
| 783 | 954 |
| 2104 | 639 |
| 650 | 2089 |
| 509 | 2445 |
| 2930 | 74 |
| 2153 | 172 |
| 92 | 2435 |
| 2830 | 514 |
| 625 | 170 |
| 1312 | 43 |
| 2361 | 2459 |
| 26 | |

### யா / சா

| தொடர்.இல | தொடர்.இல. |
|---|---|
| 100 | 353 |
| 362 | 569 |
| 816 | 934 |
| 1023 | 2622 |
| 4943 | 5409 |
| 6073 | 6692 |
| 7056 | 66 |
| 382 | 614 |
| 912 | 3156 |
| 3426 | 3899 |
| 4311 | 4681 |
| 5147 | 5165 |
| 6241 | 6409 |
| 3264 | 965 |
| 2290 | 02 |
| 6303 | 558 |
| 393 | 2679 |
| 3964 | 5754 |
| 157 | 6976 |
| 4517 | 708 |
| 1768 | |

### யா / வெ

| தொடர்.இல. | தொடர்.இல. |
|---|---|
| 794 | 837 |
| 1037 | 41 |
| 705 | 903 |
| 20 | 185 |
| 504 | 645 |
| 727 | 508 |
| 622 | 648 |
| 680 | 792 |
| 32 | 614 |
| 967 | 1533 |
| 08 | 538 |
| 546 | 847 |
| 908 | 84 |
| 471 | 864 |
| 1610 | 117 |
| 779 | 944 |
| 53 | 555 |
| 1620 | 178 |
| 638 | 765 |


விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் நடாத்தும்

## தமிழிசை விழா

இடம்: நல்லூர் கந்தசாமி கோவில் வடக்கு வீதி

நாலாம் நாள் 5-5-1992

செவ்வாய்க்கிழமை நிகழ்ச்சிகள்

மாலை 5.00 மணி தொடக்கம் 6.00மணிவரை மங்கள இசை

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| திரு.ஏ.பாலசுதந்திரன் | திரு ஏ.சின்னக்கணேஸ் |
| '' வி. நகுலேஸ்வரன் | '' வி. ராமச்சந்திரன் |
| '' கே. நம்பிராஜன் | '' கே. சச்சிதானந்தன் |
| '' கே. உதயநாதன் | '' கே. நாகேந்திரம் |

6.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை பாட்டு

செல்வி ராதிகா சுப்பிரமணியம் — பாட்டு
செல்வி சாந்தநாயகி சுப்பிரமணிம் — வயலின்
திரு. எஸ். துரைராசா — மிருதங்கம்

7.00 மணிதொடக்கம் 8 00 மணிவரை பாட்டு

திருமதி மிதிலா விவேகானந்தன் — பாட்டு
திரு. எஸ். சர்வவேஸ்வரசர்மா — வயலின்
திரு. கே. கண்ணதாசன் — மிருதங்கம்

8.00மணி தொடக்கம் 8.30 மணிவரை சிறப்பு விருந்தினர் உரை

செல்வி ஜெயா அவர்கள் (பொறுப்பாளர், விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி)
சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
செல்வி ஜனனி அவர்கள் (பொறுப்பாளர், செஞ்சோலை)

8.30 மணி தொடக்கம் 9.30 மணிவரை பாட்டு

திரு. எஸ். பத்மலிங்கம் — பாட்டு
'' பி. கண்ணன் — வயலின்
'' எம். சிதம்பரநாதன் — மிருதங்கம்
'' எஸ். மகேந்திரன் — கெஞ்சிரா

9.30 மணி தொடக்கம் 10.30 மணிவரை நாதஸ்வரம்

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| திரு கே.எம்.பஞ்சாபிகேசன் | திரு.கைதடி பழனிமலை |
| '' வி. கே. பஞ்சமூர்த்தி | '' ஆர்.புண்ணியமூர்த்தி |
| '' எம். பி. நாகேந்திரம் | '' எஸ். முருகையா |
| | '' என். சுந்தரலிங்கம் |



வடமராட்சி சுருக்கெழுத்துக கழகம
வதிரி கரவெட்டி

பாடசாலையை விட்டு விலகியோருக்கான சுருக்கெழுத்து தட்டச்சு (தமிழ் / ஆங்கிலம்) பயிற்சிகளும் தொழில்புரிவோருக்கான தட்டச்சுப் பயிற்சி (வார இறுதி) வகுப்புக்களும் 16-05-1992 முதல் ஆரம்பமாகவுள்ளன. விண்ணப்பமுடிவுத் திகதி 08-05-1992. விரும்பியோர் நேரில் தொடர்புகொள்ளவும். (2530)

விளம்பர அன்பளிப்பு: - செயலாளர்
செல்வி கோபால் நற்குணேஸ்வரி ப. நோ.கூ.ச. கைதடி



## வரி விளம்பரம்

### காவலாளி தேவை

அமைய அடிப்படையில் கடமையாற்றுவதற்கு காவலாளிகள் தேவை. தகுதியுடையோர் சுய விபரத்துடன் 1992 05. 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (சி/4367)

### காணவில்லை

3-5-92 அன்று குலசேகரம் யோகமணி 34771072V இலக்கமுடைய அடையாள அட்டையும் மாவீரர் அட்டையும் தபால்கட்டை சந்திக்கும் சுந்தர்மடம் சந்திக்கும் இடையில் காணாமல் போய்விட்டது. கண்டெடுத்தவர் கீழ்க்காணப்படும் விலாசத்திலோ அல்லது மாவீரர் அலுவலகத்திலோ ஒப்படைக்கவும்.

A. றூபன். 75/1, பலாலி றோட், சுந்தர் மடம். [2538]


## நினைவு கூருகின்றோம்...

### 1992-05-05

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை கிண்ணியாப் பகுதியில் முஸ்லிம் ஊர்காவற்படையினரால் கொலை செய்யப்பட்ட -

**2- ம் லெப். உதயன்** (வடிவேல் பிரபாகரன் - புதுக்குடியிருப்பு, திருமலை.)

**லெப். குரு** (ஞானப்பிரகாசம் கலாமோகனராசா - தம்பலகாமம், திருக்கோணமலை.)

1988 ஆம் ஆண்டு துணுக்காயில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**றோகான்** (தவலிங்கம் ரவிச்சந்திரன் பூதராயர் கோயில் ஒழுங்கை, பருத்தித்துறை.)

1989 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் அப்பகுதி மருத்துவமனையில் சடலமாக ஒப்படைக்கப்பட்ட தமிழ்த் தொழிலாளி.

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பு பெரியபோரதீவுப் பகுதியில் தேசவிரோத சக்திகளுடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**சுபகுமார்** (சிங்கநாயகம் சிவராசா - கோட்டைக் கல்லாறு - 01, மட்டக்களப்பு.)

வவுனியா கோழியாகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**கஜன்** (வீரபத்திரன் மந்திரிகுமார் - சம்பூர், மூதூர், திருக்கோணமலை.)

**2-ம் லெப். வினிஸ்ரன்** (அருளானந்தம், செலஸ்ரின் சில்வா - பெரியநாவற்குளம், திருக்கேதீஸ்வரம், மன்னார்.)

**ஜெராட்**

கொடிகாமத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எம்மைப் பிரிந்த -

**பெரியவன்** (பொன்னுத்துரை சந்திரலிங்கம் 5 ஆம் படிவம், பாவற்குளம், வவுனியா.)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது கொல்லப்பட்ட உறுகாமத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/4363)

| | |
|---|---|
| 4605 | 4851 |
| 871 | 1014 |
| 1387 | 2459 |
| 2844 | 3984 |
| 581 | 1948 |
| 4874 | 41 |
| 139 | 595 |
| 4725 | 391 |
| 774 | 1593 |
| 2006 | 3359 |
| 4795 | 5032 |
| 5814 | 5819 |
| 87 | 1245 |
| 1448 | 5536 |
| 387 | 3957 |
| 906 | 3348 |
| 4145 | 2528 |
| 4200 | 21 |
| 25 | 123 |
| 436 | 490 |
| 506 | 2397 |
| 3027 | 4209 |
| 4731 | |

## யா / கா

| தொடர்.இல. | தொடர்.இல. |
|---|---|
| 356 | 715 |
| 79 | 714 |
| | 13 |

## கி / ப

| தொடர்.இல. | தொடர்.இல. |
|---|---|
| 367 | 511 |

## யா / தெ

| தொடர். இல | தொடர்.இல |
|---|---|
| 63 | 139 |
| 288 | 371 |
| 516 | 579 |
| 602 | 1681 |
| 171 | 301 |
| 341 | 501 |
| 913 | 1322 |
| 2562 | 4138 |
| 832 | 46 |
| 72 | 466 |
| 2092 | 632 |
| 930 | 990 |
| 2127 | 35 |
| 991 | 2695 |
| 508 | 922 |
| 940 | 2598 |
| 174 | |
| 4 | |

## யா/வி. க

| தொடர். இல | தொடர். இல |
|---|---|
| 105 | 834 |
| 787 | 779 |
| 717 | 40 |
| 338 | 880 |

## யா/பரு

| தொடர். இல | தொடர். இல |
|---|---|
| 41 | 57 |
| 109 | 529 |
| 651 | 2311 |
| 3058 | 3157 |
| 82 | 376 |
| 384 | 729 |
| 804 | 835 |
| 1209 | 1257 |
| 20 | 135 |
| 814 | 943 |
| 1536 | 1573 |
| 116 | 1590 |
| 3869 | 168 |
| 807 | 1223 |
| 2973 | 33 |
| 316 | 650 |
| 768 | 867 |
| 4190 | 209 |
| 577 | 836 |
| 3574 | 693 |
| 1226 | 210 |
| 1928 | 1569 |
| 2048 | 4312 |
| 89 | 283 |
| 480 | 918 |
| 2966 | 3782 |
| 4230 | 125 |

| | |
|---|---|
| 1620 | 178 |
| 638 | 765 |
| 966 | 59 |
| 200 | 643 |
| 718 | 289 |
| 812 | 1368 |
| 109 | 922 |
| 928 | 719 |
| 905 | 1031 |

## யா / கோ

| தொடர் இல. | தொடர்.இல. |
|---|---|
| 16 | 242 |
| 320 | 541 |
| 2966 | 3617 |
| 3795 | 5674 |
| 123 | 370 |
| 592 | 715 |
| 1572 | 2873 |
| 3145 | 6315 |
| 587 | 3449 |
| 784 | 2649 |
| 601 | 1994 |
| 538 | 3191 |
| 375 | 486 |
| 1107 | 3981 |
| 106 | 630 |
| 2970 | 3955 |
| 954 | 5342 |
| 209 | 254 |
| 310 | 902 |
| 2736 | 3329 |
| 1671 | 4247 |
| 5492 | 2897 |
| 3238 | 508 |
| 4362 | |


எமது வாடிக்கையாளர்களுக்கு

ஓர் நற்செய்தி !

இப்பொழுது எங்கள் ஸ்தாபனத்தில் சகல வகையான ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பானங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

ராஜா கிறீம் ஹவுஸ்
இல 86, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(2508)



செல்வி கோபால் நற்குணேஸ்வரி ப. நோ.கூ.ச. கைதடி

(சி/4363)



புதிய உயர் கல்லூரி

New College of High Studies

ஆரியகுளம் சந்தி
யாழ்.

O\L

DAY CLASSES

பிரிவு II

ஆரம்பம்: 7. 5. 92
காலை : 9. 00 மணி

SPOKEN ENGLISH
BY: BRITTO

புதிய பிரிவு
ஆரம்பம்: 9. 5. 92
காலை; 9. 00 மணி

O\L சனி ஞாயிறு

வகுப்புக்களும்
நடைபெறுகின்றன.
நிர்வாகி: S. அருள்நங்கை

(சி-4365)



டிப்ளோமா
மனைப் பொருளியலும்
கைத்திறனும்

KALALAYAAH
கலாலயா

- கேக் ஐசிங்
- தையற் கலை
- சமையற் கலை
- கைப்பணி
- கூந்தல் அலங்காரம்
- சித்திரக் கலை
- பூவேலை
- வர்ணம் தீட்டுதல்

பயிற்சிக் காலம் 6 மாதம்

- பயிற்சி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட *Diploma in Home Economics & Craft* தகைமைச் சான்றிதழ் வழங்கம்படும்.
- கிழமைநாள் பயிற்சிகள் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் காலை 9.00 மணி முதல் பி.ப. 1.00 மணிவரை நடைபெறும்.
- தொழில் புரிவோர், பாடசாலை மாணவியர், இல்லத்தரசிகள் நலன் கருதி சனி, ஞாயிறு, வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.

கிழமைநாள் பிரிவுகள் ஆரம்பம்: 11-05-92
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 16 05-92

மேலும் விபரங்கட்கு

கலாலயா
விக்டோரியா வீதி,
(ஆஸ்பத்திரியின் பின்புறம்)
யாழ்நகர்

(சி/4364)

நல்லூர் கிளை நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

மகத்தான சாதனைகள் சாதிக்கப்படுவது -
வலிமையினால் மட்டும் அல்ல-விடாமுயற்சியினாலும்
— ஸேம்யல் ஜான்ஸன்

ஈழநாதம்

81, ஐகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 05-05-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2806
த. பெ. எண் 66

## கூட்டுச் சதி...!

பொலநறுவை மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்செயல்களைத் தொடர்ந்து கடத்திச் செல்லப்பட்ட பன்னிரெண்டு தமிழ்ப் பொதுமக்களையும் விடுவிப்பது குறித்து பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாகத் தெரியவருகின்றது. மேலும் தமிழ் மக்களை விடுவிக்க முஸ்லிம் பிரதிநிதிகளுடன் நாம் பேசினோம். ஆனால், அந்த முஸ்லிம் பிரதிநிதிகளினால் கடத்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாதிருந்தது எனவும் இப்பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

சிறிலங்கா அரசாங்கத்தின் இக் கூற்று, மிகவும் வேடிக்கையானதும், கபடத்தனமானதுமாகும். முஸ்லிம், காடையர்களுக்கும் ஊர்காவற் படையினருக்கும் கிராம வாசிகளுக்கும் ஆயுதம் வழங்கியவர்கள் சிறிலங்கா அரசாங்கத்தினரே. மேலும் தமிழரைப் படுகொலை செய்வதற்கும், அவர்களின் உடைமைகளைச் சூறையாடுவதற்கும் முஸ்லிம்களை தூண்டியவர்களும் அவர்களே. அதாவது சிறிலங்கா அரசாங்கத்தின் அனுசரணையில்லாமல் முஸ்லிம்கள், தமிழருக்குஎதிரான நடவடிக்கை எதிலும் ஈடுபட்டதில்லை. இந் நிலையில் முஸ்லிம் ஆயுதக் கும்பல் ஒன்று தமிழர்களைக் கடத்திச் சென்று விட்டதாகவும், அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்த அரசாங்கம் முயற்சிப்பதென்பதும் வெறும் ஏமாற்று நடவடிக்கையாகும்.

அரசாங்கம் தெரிவிப்பது போன்றுதான் முஸ்லிம் ஆயுதக் குழு ஒன்று தமிழர்களைக் கடத்திக் கொண்டு போய்விட்டதென்றால், அதுவும் ஐந்து பேர் கொண்ட முஸ்லிம் குழு கடத்திச் சென்றுள்ளதென்றால், ஏன் சிறிலங்கா அரசாங்கம் தமிழரைத் தேடும் பணியில் ஈடுபடவில்லை. ஏன் முஸ்லிம் கும்பலுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்கவில்லை. தமிழர்களைத் தனது பிரஜைகள் என வற்புறுத்திக் கூறிவரும் சிறிலங்கா அரசாங்கம் ஏன் தமிழர் விடயத்தில் அக்கறையற்றுஉள்ளது. உண்மையில் அரசாங்கம் தமிழர்களைக் கடத்தியவர்களுக்குப் பாதுகாப்பு அளித்துள்ளது. மறைமுகமாக ஊக்குவித்துள்ளது.

# நெகிழ்ச்சி தன்மை கொண்ட வெளிவாரி பட்டப்படிப்பு திட்டம்

வெளிவாரிப் பட்டப் படிப்புத் திட்டத்தையாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தொடங்குவதற்கான முயற்சி முதலில் 1982 ஆம் ஆண்டில் தொடங்கியது. புதிதாக அமைக்கப்படும் திட்டங்களுக்கு அனுமதி பெறுவதில் இருக்கும் தடைகளைத் தாண்டி இத்திட்டத்தை அமுல்ப்படுத்துவற்கான அனுமதியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பல்கலைக்கழகங்கள் மானியக் குழுவிடமிருந்து பெற்றுக் கொண்டது. பல்கலைக்கழகங்கள் மானியக் குழுவின் வெளிவாரிப் பட்டப் படிப்புத் திட்டம் 1991 - இல் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இத் திட்டத்தை உருவாக்குவதற்கான அனுமதி பிரத்தியேகமாக யாழ்பபாணப் பல்கலைக்கழகத்துக்கு என்று இல்லாமல், பொதுப்படையாக இலங்கையிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்குமே வழங்கப்பட்டது. பொதுப் படையாக வழங்கப்பட்ட இந்தப்புதிய கொள்கை அனுமதியைவிட வேறுவிதிமுறைகளின் அடிப்படையில் முன்னதாக மூன்று பல்கலைக் கழகங்களில் வெளிவாரிப்படிப்பு தனித்தனியாக ஆரம்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகிறது. பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலை மற்றும் விஞ்ஞானக் கற்கைநெறிகள் சிலவும், கொழும்புப் பல்கலைக் கழகத்தில் சட்டமும், ஜெயவர்த்தனபுரப் பல்கலைக் கழகத்தின் வர்த்தகவியலும் வெளிவாரிப் பட்டப் படிப்புக் கலைத் திட்டத்தில் இடம் பெற்றன. பின்னதாகச் சட்டம் கொழும்புப் பல்கலைக் கழகத்திலிருந்து திறந்த பல்கலைக்கழகத்துக்கு மாற்றப்பட்டது. இந்தப் பழைய அமைப்பை மாதிரியாகக் கொண்டே யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தைத் தவிர்ந்த ஏனைய பல்கலைக் கழகங்களில் வெளிவாரிப் பட்டப்படிப்புத் திட்டம் செயற்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் புதியதிட்டத்திற்கு அமைய இன்று நடைமுறையிலிருக்கும் புதிய வெளிவாரிப் பட்டப் படிப்புத் திட்டம் அமைதியான குணவிஷேசங்களைக் கொண்டது. இதனை ஒரு மாற்று வழி என்றும் சொல்லலாம். இந்தப் புதிய திட்டம் யாழ். பல்கலைக் கழகத்தில் மாத்திரம் நடைமுறையிலுள்ள வெளிவாரிப் பட்டப் படிப்புத் திட்டங்களை விட இது வேறுபட்டது. பரீட்சையை மட்டும் நடாத்தும் வெளிவாரிப் படிப்பு கொண்டதல்ல யாழ், பல்கலைக் கழகத்தில் இப்போது நடைமுறையில் இருக்கும் புதிய திட்டம்.

## நெகிழ்ச்சிப் பண்பு

இந்தப் புதிய முறை பல நெகிழ்ச்சிப் பண்புகளைக் கொண்டது. கல்வி முறையில் தடங்கலும் தாமதமும்ஏற்படுவதை புதிய முறைதவிர்க்கிறது. கல்விப் பொதுத்தராதரப் (உயர்தரம்) பரீட்சையில்ஏதேனும் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் வெளிவாரிப் பட்டப் படிப்புத் திட்டத்தில் பதிவு செய்து கொள்ளலாம் அல்லது குறித்த மாணவன் க. பொ. த. (உயர்தரம்) மூன்று பாடங்களுக்குச் சமமான கற்கைநெறியிற் சித்தியடைந்திருந்தால்(உதாரணம் PLUS - 4) அவர்களும் அனுமதிக்கப்படுவர். மற்றும்அங்கீகரிக்கப்படாத கல்வித்தகைமைகள், அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகைமைகளுக்குச் சமமாகக்கருதப்படின்அவர்களும்இப் புதிய திட்டத்தில் சேர்ந்து கொண்டுகல்வி பெறஅனுமதிக்கப்படுவர். பயிற்றப்பட்ட ஆசிரியர்களும், பண்டிதர்களும்இத் திட்டத்தின் கீழ் தமது பெயர்களைப்பதிவு செய்து கொண்டு தமது படிப்பைத் தொடர வாய்ப்புண்டு.

க. பொ. த. (உயர்தரம் பரீட்சையில் ஏதேனும் மூன்று விஞ்ஞானப் பாடங்களில் சித்தியடைந்தவர்கள் கலைத் துறை சார்ந்த பாடங்களைப் பின்பற்ற இத்திட்டத்தில் வாய்ப்பு வழங்கப்படுகிறது. ஆரம்பத்தில் சற்றுத் தயங்கிய விஞ்ஞான மாணவர்கள் இப்போது கலைப் பாடங்களைப் படிப்பதில் ஆர்வம் காட்டுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டதாரிகள் இந்தப் புதிய முறையில் சேர்ந்து கொண்டு தமது ஆற்றலை விருத்திசெய்யும் வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் இரண்டாம் ஆண்டில் சேர்ந்துகொள்ளலாம். முதலாம் ஆண்டுப் பாடஅலகுகளிலிருந்து இவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. சிறப்புப்பாடங்களாகத் தமிழ், இந்துநாகரிகம், நாடகமும் அரங்கியலும், புவியியல், அரசியல் விஞ்ஞானம், பொருளியல் ஆகிய பாடங்களில் முதலாம் ஆண்டுத் தேர்வில் சித்தியடைந்தவர்கள் இரண்டாம் ஆண்டில் சேர்ந்து கொள்ளலாம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பரீட்சை எடுத்தவர்கள் மாத்திரம் பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்க்கும் நிலையில் இரண்டாம் ஆண்டில் இந்தப் புதிய முறையில் அனுமதிக்கப்படுவார்கள்.

இலங்கையிலுள்ளபல்கலைக் கழகங்களுக்கான பல்கலைக் கழகங்கள் மான்யக் குழு அனுமதி, குறித்த ஆண்டு க. பொ. த.(உயர்தர) பரீட்சைப் பெறுபேறுகளைத் தழுவியது ஆனால் இத்திட்டத்தில் சேர்ந்து கல்வியைத் தொடர விரும்புகிறவர்களுக்கு குறிப்பிட்ட ஆண்டுப் பெறுபேறுகள், வயது ஆகியன முட்டுக்கட்டையாக அமையாது. கல்வியைத் தொடர முடியாது விடுபட்டுப் போனவர்கள் குறிப்பிட்ட தகைமைகள் இருந்தால் தமது பெயர்களைத் தடங்கல் எதுவும் இன்றிப் பதிவு செய்து கொள்ளலாம். 70-80 களில் பல்கலைக்கழகங்களில் இறுக்கமான அனுமதியால் பல்கலைக் கழகங்களுக்குள் நுழைய முடியாதவர்களுக்கு இது ஒரு நன்மையாகும். பயிலுனர் ஆசிரியர் தொண்டர் ஆசிரியர் போன்றவர்களும் தமது கல்வியைத்தொடர இத் திட்டம் சந்தர்ப்பம் வழங்குவதாகக் கருதிக்கொள்வது நல்லது.

மதன்

தொழில் புரிபவர்கள் தொழில் செய்து கொண்டே தமது அறிவை விருத்திசெய்து கொள்ள இத்திட்டம் போதிய வாய்ப்பளிக்கிறது குறிப்பிட்ட ஒரு பரீட்சையின் பிறகு தற்காலிகமாகப் படிப்பை விட்டு விலகுபவர்கள் மீளவும் தாம் விரும்பும்போது படிப்பைத் தொடர இத்திட்டம் உதவுகிறது. ஆண்டுதோறும் இடம் பெறும் தேர்வுகளையும் அதன்

வெளிவாரிப் பட்டப் படிப்புத் திட்டத்தில் இடம் பெறுகின்றன காலப்போக்கில் வசதி வாய்ப்புகள், வளங்கள் ஆகிய வற்றின் அடிப்படையில் பாடநெறிகள் விஸ்தரிக்கப்படும். விஞ்ஞான பாடங்களை கற்றுக் கொள்ளும் வாய்ப்பு இந்த ஆரம்ப நிலையில் இல்லையென்றாலும் பின்னால் அறிமுகப் படுத்தப்படவுள்ளது.

வர்த்தகக் கற்கைநெறியில் கணக்கியல், வர்த்தகம், பொருளியல் ஆகிய பாடங்கள் கலைத்திட்டத்தில் இடம் பெறுகின்றன. வர்த்தகம், ஒருங்கிணைந்த பாடநெறியானதால் அதனைப் பிரித்துப் பார்க்க முடியாது.

கலைப்பிரிவில் பதினாறும் பிரதான பாடங்களைப் படிக்கக் கூடிய வசதியும் பத்துத் துணைப்பாடங்களும் உள்ளன சமகால விவகாரம் தொடர்பியல் கல்வி, சூழல், சமூக மனோவியல், சிறிலங்கா விவகாரக்கல்வி முகாமைத்துவம் கைத்தொழில்கல்வி அளவையியல் கணிதம்ஆங்கிலம் ஆகிய பாடங்கள் துணைப்பாடங்கள் பட்டியலில் இடம் பெறுகின்றன ஆங்கிலம் ஒரு இரண்டாவது பாடமாகவும் கட்டாய துணைப்பாடமாகவும் அனைவர்க்கும் கற்பிக்கப்படுகின்றது.

மொத்தமாக மூன்று பிரதான பாடங்களை வெளிவாரிப்பட்டப்படிப்பு நெறியை பின்பற்றும் மாணவர்கள் தெரிவு செய்ய வேண்டும் இது ஆறு அலகுகளைக் கொண்டதாகும் ஆங்கிலம் இரண்டாவது மொழியாக ஒரு அலகும் மற்றொரு துணைப்பாடத்தில் ஒரு அலகுமாக மொத்தம் எட்டு அலகுகளை உள்ளடக்கியது பட்டப் படிப்புநெறி

பொதுப்பட்டப்படிப்பு மூன்று கல்வியாண்டினைக் கொண்டது. வர்த்தகம் மற்றும் சிறப்புப்பட்டப் படிப்பு நான்கு கல்வியாண்டு காலத்தை உள்ளடக்கியது.

> யாழ். பல்கலைக் கழகத்தில் அறிமுகப் படுத்தப் பட்டிருக்கும் வெளிவாரிப் பட்டப் படிப்புத் திட்டம் அனுமதி மறுக்கப்பட்ட மாணவர்களுக்கும், கல்வியைத் தொடர முடியாமல் இடை நடுவில் கைவிட்டவர்களுக்கும், துறை சார்ந்த கல்வியை விருத்தி செய்து கொள்ள விரும்புகிறவர்களுக்கும் சாளரம் திறக்கிறது.

அத்தகைய கல்வியை மரபுவழி கற்கை வழியாக வழங்க முடியாது மேலும் உயர்கல்வியை எமது மக்களிடையே பரப்ப வேண்டும் என்ற எண்ணம் 3 ஆம் உலக நாடுகளில் இப்போது முக்கியத்துவம் பெறுகிறது. இதன் விளைவே இப் புதிய வெளிவாரிப்பட்டப்படிப்பு முறையாகும்.

வழமையான நிர்ப்பந்தங்கள் இந்தக்கல்வி முறையில் குறைவென்றே கூறவேண்டும். இந்தக் கல்வி முறை மாணவருக்கும் ஒரு புதிய அநுபவத்தைத் தருகிறது மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்விமான்களின் அறிமுகத்தைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள் உள்வாரி மாணவர்களைப் போல் சில வாய்ப்புகளையும் வசதிகளையும் பெறமுடியாவிட்டாலும் வெளிவாரி மாணவர்கள் பல்கலைக்கழக கல்விச் சூழலில் புதிய அநுபவங்களைப் பெற இத்திட்டம் வாய்ப்பினைத் தருகிறது

இவர்களுக்கான வழிகாட்டல் பல்கலைக்கழகப் பேராசிரியர்களாலும் விரிவுரையாளர்களாலும் வழங்கப்படுகிறது ஆனால் கற்றல் நடவடிக்கைகளை வெளியில் சுயமாக மேற்கொள்ள வேண்டும் பயிற்று முறையில் இந்த மாற்றம் ஏற்பட்டதால் உள்ளூராட்சி மன்றங்கள்தமதுபடிப்பகங்களை நூல் நிலையங்களாக மாற்றிச் சமகாலச் சமூகத் தேவையைப் பூர்த்தி செய்வதில் கரிசனை காட்ட வேண்டும் என்பது இத்துறைசார்ந்த மாணவர்களின் எதிர்பார்ப்பாகும்.

மாணவர்களின் ஆளுமை, கல்வி ஈடுபாட்டில் தொடர்ந்தும் நாட்டம் கொள்ளுகல் ஊக்கம், நம்பிக்கை ஆகிய பண்புகள் வழிகாட்டுதலின் மூலம் ஏற்படுகிறது. மாணவர்களின் மனப்பான்மையும் மாறுகிறது.

1991-10-22-இல் இந்தப் புதியவெளிவாரிப்பட்டப்படிப்புத்திட்டம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டது வர்த்தகக்கற்கை நெறியில் 300பேரும் கலைத் துறையில் 1020பேரும் படிப்பைத் தொடங்கினார்கள். இவர்களில் அநேகமானவர்கள் தொழில் பார்ப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஓய்வு பெற்றுள்ள அரச ஊழியர்களும் இக் கற்கை நெறியைப் பின்பற்றுகிறார்கள். ஓய்வு பெற்ற அரசாங்க அதிபர் ஒருவரும் புத்துணர்ச்சியுடனும், உற்சாகத்துடனும் கற்கை நெறியைப் பின்பற்றுகிறார் என்பது குறிப்பிடத்

வெலிக்கந்தைக்கு அருகிலுள்ள 'அழிஞ்சிப் பொத்தானை முஸ்லிம் கிராமத்தில் சுமார் 60 முஸ்லிம்கள் கொல்லப்பட்டபோது இதற்கு விடுதலைப் புலிகளே காரணம் என தனது வழமையான பாணியில்' சிறிலங்கா அரசாங்கம் குற்றம் சாட்டியது. இதைப் பற்றிப் பிடித்துக் கொண்டு கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களும் புலிகளுக்கு எதிராக தமது வழமையான பாணியில் கண்டனக் கணைகளைத் தொடுத்தன. இத்தனைக்கும் இவை விடுதலைப் புலிகளால் செய்யப்பட்டிருக்கலாம் என்ற ஊகத்தின் அடிப்படையில் எழுந்தவையே.

ஆனால், இதே பகுதியில் சுமார் 60 தமிழர்கள் முஸ்லிம் ஊர்காவற் படையினராலும், முஸ்லிம் காடையர்களாலும் படுகொலை செய்யப்பட்டார்கள். இப்படுகொலைக்கு முஸ்லிம் ஊர்காவற்படையும், காடையர்களுமே பொறுப்பு என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களும், செய்தித்தாபனங்களும் ஊர்ஜிதப்படுத்தின. ஆனால், கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களோ, அன்றி சிறிலங்கா அரசாங்கமோ, தமிழர் படுகொலையைப் பற்றி மூச்சுத்தானும் விடவில்லை. ஏன் தமிழ்க் குழுவினர் தமிழர் படுகொலை நடந்ததாகக் காட்டிக் கொள்ளவும் முன்வரவில்லை.

இதே போன்றே, முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டபோது அப்பகுதிக்கு சிறிலங்கா அரசு இராணுவத்தை அனுப்பியது, அமைச்சர்களை அனுப்பியது நிவாரண உதவிகளையும் உடன்விரைந்து அனுப்பியது. ஆனால் படுகொலை நிகழ்ந்த தமிழ்க் கிராமங்களுக்கு எதுவித பாதுகாப்போ அன்றி உதவிப் பொருட்களையோ அரசாங்கம் அனுப்பவில்லை. அச்சத்தின் காரணமாக காடுகளுக்கு ஓடிய தமிழர்கள் கிராமங்களுக்குத் திரும்பவில்லை. கிராமங்களில் என்ன நடந்தது என்றே தெரியவில்லை. அதாவது தமிழர்களை சிறிலங்காவின் பிரஜை என்றோ, அன்றி மனிதர்கள் என்றோ சிங்கள அரசு கணிப்பிடவில்லை. இதே போன்றே தமிழர் பற்றி தமிழ்க் குழுக்களும் எதுவித அக்கறையும் காட்டவில்லை. கண்டனக்குரல் எழுப்பவில்லை.

அதாவது தமிழர் கொல்லப்படுவது பற்றி சிங்கள அரசாங்கத்திற்கு அக்கறை இல்லை. இதேவேளை, கொழும்பிலுள்ள தமிழ் குழுக்களுக்கு கண்டனக்குரல் எழுப்ப திராணியில்லை. அல்லது அக்கறையில்லை இந்நிலையில் அரசாங்கம் தமிழ் மக்களையும் தமது பிரசைகள் என்கிறது. கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களே அரசாங்கத்துடன் இணைந்து தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணப்போகிறோம் என்கிறது. அவ்வாறானால் இவர்கள் இருபகுதியும் சேர்ந்து தமிழர் பிரச்சினைக்குக் காணப்போகும் தீர்வு என்ன? அது தமிழர்களை ஏதோ ஒரு வழியில் ஒட்டுமொத்தமாக அழித்து விடுவதற்கான கூட்டுச்சதியைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்?

---

கத்தில் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இது அனுமதி மறுக்கப்பட்ட மாணவர்களுக்கும், கல்வியை இடை நடுவில் கைவிட்டவர்களுக்கும், தொழில்துறை சார்ந்த கல்வியை விருத்தி செய்து கொள்ள விரும்புகிறவர்களுக்கும் பெரிதும் உதவக் கூடியதாகவும் வழமையான

சியல் விஞ்ஞானம், பொருளியல், நுண்கலைகள் ஆகிய கற்கை நெறிகளில் ஏதாவது ஒன்றை மேற்படி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரிகள் தெரிவு செய்து கொள்ள உரிமை உண்டு.

இலங்கையில் ஏனைய பல்கலைக்கழகங்களில் அல்லது கல்வி நிறுவனங்களில் முத

கிறது. ஆண்டுதோறும் இடம் பெறும் சோதனையும் அதன் மூலம் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் சான்றிதழ்களும் வாழ்க்கையில் மாணவர்களுக்குப்பயன்பொருத்தமாக அமைகிறது.

### கற்கை நெறிகள்

கலை, வர்த்தகம் ஆகிய இரு கற்கை நெறிகளே இப் புதிய

நான்கு கல்வியாண்டு காலத்தை உள்ளடக்கியது.

### நோக்கமும் வழிகாட்டுதலும்

20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒட்டு மொத்தமான தொழில் மற்றும் உற்பத்தி மேம்பாட்டிற்கு கல்வி அச்சாணியாக அமைகிறது

கிறார் என்பது குறிப்பிடத்தக்க உதாரணமாகும்.

யாழ் பல்கலைக் கழகத்தில் இப்போது செயற்படும் இந்தப் புதியதிட்டம் இன்னோரன்ன காரணங்களால் கல்வியைத் தொடர முடியாதவர்களுக்குஒருபுதியவிஷயம்.

---

# இருதய நோய் வருவதற்கு தேங்காய்ப்பால் காரணம்

(கொழும்பு)

தேங்காய்ப்பால் உணவு உண்ணுவதனாலேயே இலங்கையில் கூடுதலானோருக்கு இருதய நோய் காணப்படுகின்றது என்று தமிழக இருதய நோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் கே. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிலுள்ள இருதய நோயின் சிகிச்சை நிபுணர்களின் அமெரிக்க கல்லூரியின் வருடாந்த மாநாட்டில் கலந்து வீட்டுச்சென்னைதிரும்பும் வழியில் கொழும்பு வந்த டாக்டர் கே. சுப்பிரமணியம், இவ்வாறு தெரிவித்தார்.

''இலங்கையிலிருந்து கூடுதலான இருதய நோயாளர்கள் சென்னைக்குச் சிகிச்சைபெற வருவதால் நான் இலங்கைக்கு வரவிரும்பினேன்'' என்று தெரிவித்தார்.

இலங்கையின் சனத்தொகையில் பெரும்பாலானவர்கள் மாமிசம் அருந்துபவர்கள். உணவுவகைகளுக்குப் பெருமளவில் தேங்காய்ப்பால் சேர்க்கப்படுகின்றது. தேங்காயில்தான் நெய், பட்டரிலும்பார்க்க கூடுதலான கொலஸ்ரோல் உண்டு இதன் காரணமாகவே இலங்கையில் கூடுதலானோருக்கு இருதய நோய் காணப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

# வட்டார ரீதியாக ஒத்துழைப்புக் குழுக்கள்

(யாழ்ப்பாணம்)

மாநகராட்சி மன்ற எல்லைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் மராமத்து வேலைகளிலுள்ள குறைபாடுகள், மாற்று. நடவடிக்கைகள் அபிவிருத்தி, பற்றிய கருத்துக்கள், ஆலோசனைகளை வட்டார மக்களிடமிருந்து பெற்றுக் கொள்வதையும், அவசர கால நடவடிக்கையின் போது ஒத்துழைப்பை பெறுவதையும் நோக்கமாகக் கொண்டு வட்டார ரீதியாக ஒத்துழைப்புக் குழுக்கள் அமைக்கப்படவிருக்கின்றன என்று யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

வட்டார ரீதியில் அமைக்கப்படவிருக்கும் இக் குழுக்கள் பற்றிய ஆலோசனைக் கூட்டம் வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 8.30 மணிக்கு நாவலர் வீதியிலுள்ள நாவலர் மண்டபத்தில் நடைபெற உள்ளது. இவ் ஆலோசனைக் கூட்டத்தில் பங்குபற்றும்படி யாழ் மாநகராட்சிமன்றப் பிரதேசத்திலுள்ள சகல சனசமூக நிலையங்களினதும் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சிறுவர்களுக்கு கட்டாயக் கல்வி

நாட்டின் எல்லாப் பிள்ளைகளும் பதினொரு ஆண்டுகள் கட்டாயக் கல்வி பெற்றுக் கொள்ளவும், ஊக்கமளிக்கவும் கல்வி, உயர் கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது மாணவர்கள் கல்வியை இடைநிறுத்தி விட்டுச் செல்வதைத் தடுக்கவும் விசேட திட்டமொன்றை வகுத்துள்ளது.

பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதற்குப் பெற்றோர்களைக் கட்டாயப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் இனக்கலவரம் ஓய்ந்தது

அமெரிக்காவில் இன வன்முறை கண்ட லொஸ் ஏஞ்சல்ஸ் பிற பகுதிகளும் இயல்பு நிலைக்கு திரும்பிக்கொண்டிப்பதாகத் தெரிய வருகிறது. எனினும் ஆயிரக்கணக்கான பொலிசாரும், துருப்புகளும் இன்னமும் ஐந்து தினங்களுக்கு உஷார் நிலையில் அங்கு வைக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே கறுப்பர்-வெள்ளையர் தொடர்பான இனப் பிரச்சினைக்கு நீண்ட காலத் தீர்வு காண்பதற்கு அமைச்சரவைக் கூட்டத்தை அழைத்திருக்கும் அதிபர் புஷ் திட்டமிட்டபடி லொஸ் ஏஞ்சல்ஸ்க்கு சொல்லப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

# ஜே. ஆர் எழுதிய நூலில் அச்சுப் பிழை ஏராளமாம்

அண்மையில் முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனாவினால் எழுதப்பட்டுபுதுடில்லிவிசாகாஸ்வெளியீட்டகத்தால் வெளியிடப்பட்ட மென் அன்ட் மெமோறிஸ் (மனிதர்களும் நினைவுகளும்) என்ற நூலில் ஏராளமான அச்சு மற்றும் எழுத்துப் பிழைகள் இருப்பதாக தெரிய வருகின்றது.

இந்தியா இழைத்த நம்பிக்கைத் துரோகத்தைப் பற்றி வெளிப்படுத்துவதேஇந்நூலின் நோக்கம் என்பதால் இந்திய வெளியீட்டாளர்கள் இத்தவறுகளை வேண்டுமென்றே இழைத்திருப்பார்களோஎன்று கொழும்பில் பேசிக்கொள்ளப்படுகின்றது.

## வருடாந்த மகோற்சவம்

உரும்பராய் பருவத வர்த்தனி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 7-5-92 வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்களுக்கு நடைபெறும். 15-5-92 இரதோற்சவமும் 16-5-92 சனி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

தினமும் மாலை 6 மணி தொடக்கம் 7 மணி வரை திருமுறைத் தொடர் சொற்பொழிவு பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் திருமுறை மொழியரசு திரு. சிவ. மஹாலிங்கம் அவர்களால் நிகழ்த்தப்பெறும்

## முதலுதவிப்போட்டி விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

வைத்திய முதலுதவிக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில் பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் உடற் பயிற்சித்துறையினர் போட்டி ஒன்றை நடாத்தஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர். முதலுதவி அறிவுடைய எவரும் பங்கு பற்றக்கூடிய இரு போட்டி எழுத்துப்பரீட்சை, செய்முறைப்பரீட்சை என கட்டங்களாக நடைபெறும். இப் போட்டியில் பங்குபற்ற இம் மாதம் முப்பத்தோராம் திகதிக்கு முன்பாக சுயவிபரங்களோடு ஏஸ். ஏ. அருட்பிரகாசம், விரிவுரையாளர் உடற்பயிற்சித்துறை, பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை திருநெல்வேலி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கும் படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## சேவை அதிகரிப்பு

பருத்தித்துறையாழ்ப்பாணம் 751 இலக்க பாதை சேவையை தனியார் பேருந்துச் சங்கம் மேலும் அதிகரித்துள்ளது.

2 ஆம் திகதி முதல் இப்பாதைக்கு ஐந்து பஸ்கள் சேவையிலீடுபட்டுள்ளன. பஸ் கட்டணமும் குறைந்துள்ளது.

ஈழநாதம்

# உயர் நீதிமன்றத் தீர்ப்பை அ.தி.மு.க. அரசு உதாசீனம்

(சென்னை)

தமிழக சட்டப்பேரவைச் செயலர் நீதிமன்றத்தின் முன் ஆஜராகிச் சில தகவல்களைக் கொடுக்க வேண்டும் என்ற உச்ச நீதிமன்றம் பிறப்பித்த கட்டளைக்கு இணங்கி சட்டப் பேரவைச் செயலரை நீதிமன்றத்திற்கு அனுப்புவதில்லை என்று தமிழக சட்டப்பேரவையின் விசேட கூட்டம் நேற்று தீர்மானித்தது.

எனினும் சட்டப் பேரவையின் இறைமைக்கு பாதிப்பு ஏற்படுத்தாத தகவல்களை மாநில சட்டத்துறை குறிப்பிடும் வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்திற்கு சட்டப்பேரவை தெரியப்படுத்தும் என்றும் அந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டது.

தமிழக சட்டப் பேரவையில் இது சம்பந்தமான விவாதம் நேற்று நடந்தபோது மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் தம்புசாமி இந்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்றுகூறி அதனைச் சுட்டிக்காட்டும் வகையில் வெளிநடப்புச் செய்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பழனிசாமி, இந்திய ஐக்கிய பொதுவுடமைக் கட்சி உறுப்பினர் எஸ். பி சண்முகம் உழவர் உழைப்பாளர் கட்சி உறுப்பினர் பழனிச்சாமி, இந்திய பார்வாட் புளக் உறுப்பினர் ஆண்டித்தேவர், இந்திய குடியரசுக்கட்சி உறுப்பினர் தமிழரசன், ஜனதாதள் உறுப்பினர் குமாரதாஸ், பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் பண்ருட்டி ராமச்சந்திரன், அண்ணா புரட்சித் தலைவர் தமிழக முன்னேற்றக் கழக உறுப்பினர் எஸ். திருநாவுக்கரசு ஆகியோரும் தீர்மானத்தை எதிர்த்தனர்.

எனினும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை ஒட்டு மொத்தமாக நிராகரிக்கும் வகையில் வழக்கறிஞர் மூலமும் தகவல் அனுப்பக் கூடாது என இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் கூறியதோடு இந்திராகாங்கிரஸ் கட்சியினர் அ இ. அ. தி மு. கவுடன் சேர்ந்து தீர்மானத்தை ஆதரித்தனர்.

# இன்றைய போட்டிகள்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினரால் நடாத்தப்படும் பதினொரு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் முதற் சுற்றில் தெரிவு செய்யப்பட்ட ஆறு கழகங்களுக்கிடையிலான லீக்முறையிலான இரண்டாவதுசுற்றுபோட்டியில் இன்று குருநகர்பாடும் மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தா விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3-30 மணிக்கு இப் போட்டி நடைபெறவுள்ளது.

# தமிழை வளர்க்க நாம் ஒருமித்துச் செயற்படுவோம்

## தமிழிசை விழாவில் மனோ அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

''தமிழுக்கு விழாஎடுப்பதாயினும் சரி, தமிழுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகப் போராடுவதாயினும் சரி இரண்டிலும் நாம் அனைவரும் ஒருமித்தே செயற்படுவோம் இதன் மூலம் தமிழை வளர்க்க நாம் தயங்காது முகம் கொடுப்போம்'' இவ்வாறு நேற்று நல்லூர் கந்தசுவாமி ஆலய மைதானத்தில் நடைபெற்ற மூன்றாம் நாள் தமிழிசை விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய விடுதலைப் புலிகளின் வன்னிப்பகுதி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு.மனோ அவர்கள் கூறினார்.

ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்த இவ் விழாவில் அவர் தொடர்ந்துஉரைநிகழ்த்தும் போது நாம் யாருக்கும் அநீதி இழைப்பதற்காகப் போராடவில்லை தமிழ் இனத்துக்கும் தமிழ்மொழிக்கும் எதிராக இழைக்கப்படும் அநீதிகளுக்கெதிராகவே நாம்போராடிவருகின்றோம் என்றார்.

மேலும் இன்று நடைபெற்றுவரும் தமிழிசை விழா தமிழ் இனத்துக்கும் தமிழ் மொழிக்கும் உறுதியளிப்பதாகவும் உரமூட்டுவதாகவும் அமைந்துள்ளது என்றும் இவ் விழாவில் பங்குபற்றிய இசைக் கலைஞர்களுக்கு நாம்நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்என்றும் கூறியதுடன் வன்னியில் நடைபெறஇருக்கும்இவ்வாண்டுக்கான முத்தமிழ்விழாவுக்கு அனைவரும் திரண்டுவரவேண்டும்என்று அழைப்பு விடுத்தார்.

# ஒப்படைப்பு

ஆசீர்வாதம் பூமணி என்பவர் தனது மகனான சந்திரகுமார் என்பவரை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து போராடுவதற்கென அரியாலை கிராமியச் செயலகத்தில் நேற்று முன்தினம் ஒப்படைத்துள்ளார்.

# கட்டுநாயக்கா செல்லும் வாகனங்கள் சோதனை

(கொழும்பு)

கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்திற்குச்செல்லும் சகல வாகனங்களும் வீதிகளில் நிறுத்திப் பலத்த சோதனைக்கு உட்படுத்தப்படும். இது உடனடியாகவே அமுலுக்கு வந்துள்ளது. சோதனையில் ஈடுபடும் பொலிஸாருக்கு விமானப் படையினர் மற்றும் தொண்டர்படையினரும் உதவுவர் எனவும், வாகனங்களும் அவற்றில் பயணம் செய்பவர்களும் சோதனைக்கு உட்படுத்தப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே விமான நிலையம் செல்பவர்கள் தேசிய அடையாள அட்டைகளை எடுத்துச் செல்லும்படியும், கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தகவலயத்தில் பணிபுரிபவர்கள் தமது காரியாலய அடையாள அட்டைகளுடன் தேசிய அடையாள அட்டைகளையும் எடுத்துச்செல்ல வேண்டும் என்றும் பொலிஸார் அறிவித்துள்ளனர்

# சிறப்புற நடைபெறும் தமிழிசைப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

தமிழிசைவிழாவின் மூன்றாம் நாள் விழா நேற்று கோலாகலமாக நடைபெற்றது. நேற்றைய விழாவில் தமிழீழ இசைக் கலைஞர்களின் பல இசை நிகழ்வுகள் இடம் பெற்றன. இவ்விழாவிற்கு ஆயிரக்கணக்கான மக்கள் அணி திரண்டு வந்திருந்தனர்

நேற்று மாலை 5-00 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலய மைதானத்திலே விசேடமாக அமைக்கப்பட்ட அரங்கில்நேற்றைய மூன்றாம்நாள் தமிழிசை விழா ஆரம்பித்தது விழாவின்ஆரம்பத்தில் விசேட குழுவினரின் மங்கள இசை முழங்கியது.

தொடர்ந்து பல விசேட இசை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. இவற்றை தொடர்ந்து சிறப்பு விருந்தினர் உரை இடம் பெற்றது இந்த நிகழ்வுக்கு வடமராட்சி கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. பாஸ்கரன் தலைமை தாங்கினார். சிறப்புவிருந்தினர்களாகவண.பிதா பிரான்சிஸ் யோசேப்அடிகளார், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பருதி வன்னிப் பகுதி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மனோ ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். சிறப்பு விருந்தினர் உரையைத் தொடர்ந்து பல இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

(ஈ)

# இந்தியப்படை

வியப்பளிப்பதாகவும் அந்த அதிகாரிமேலும்தெரிவித்தார்.

சிறிலங்கா ஜனாதிபதியின் பேச்சு தவறாகஅர்த்தம்கொள்ளப்பட்டுள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களாக இலங்கைக்கும்இந்தியாவிற்கும் இடையிலான உறவில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டு வந்த போதிலும் பிரேமதாசாவின் இந்த உரையும் இது தொடர்பாக இந்தியாவின் கண்டனமும் இருதரப்புக்கும் இடையே சந்தேகம் நிலவுவதையே காட்டுகிறது என பி.பி.சி. வர்ணித்தது.

# கிழக்கு மாகாண

மூலம் அவற்றைப் பிரசாரப் படுத்துகிறது. அது உண்மைக்குப் புறம்பாக இருந்தபோதிலும் அது வெளிக்கொணரப்பட்டு உண்மைவடிவம்கொடுக்கப்படுகிறது

இத்தகைய சம்பவங்கள் முன்னரும்நடந்துள்ளன அது பின்னர் காலங்களில் நிரூபிக்கப்பட்டுள்ளன அப்படியான ஒரு சம்பவமாகத் தான் இது இருக்கின்றது

இக் குற்றச்சாட்டுகளுக்கு விடுதலைப் புலிகளைக் குற்றம் சாட்டிப் பிரயோசனம் இல்லை. சிறிலங்கா அரசையே நாம் குற்றம் சாட்டுகிறோம். ஏனென்றால் அவர்கள் வடக்கு மாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் பிரிக்க நிற்கின்றார்கள். அவ்வாறு பிரிக்கும் போது அங்கேற்படும் குழப்ப நிலைகளைப் பாவிக்கிறார்கள். அங்கு ஏற்படுகின்ற இடைவெளிகளில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துகிறார்கள். ஒரு நிரந்தரமான தீர்வுக்கு இடைஞ்சல்களாக இப்படியான குழப்பங்களை ஏற்படுத்த நினைக்கின்றார்கள்

அதன் காரணமாகத்தான் ஒற்றுமையாக இருந்த தமிழ் மக்களும், முஸ்லிம்மக்களும் இப்பொழுது முரண்பட்டு, முறுகல் நிலையிலிருக்கின்ற நிலைமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இவ்விடயத்தில் முஸ்லிம் பிரதிநிதிகளோடு நாங்கள் கதைக்க விரும்புகின்றோம். அப்படியான முயற்சிகளை நாங்கள் முன்னரே மேற்கொண்டிருந்தோம். ஆனால் வெவ்வேறு சந்தர்ப்பங்கள் காரணமாக அது கைநழுவிப் போய்க் கொண்டிருப்பதைக் காண்கின்றோம். ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படும் போது இது நிச்சயமாகதமிழர் தாயகத்திலுள்ள ஒருஉள்நாட்டுப் பிரச்சினையாக நாங்கள் இதனை அணுகி முஸ்லிம் மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி மிகவும் சுலபமான முஸ்லிம் மக்களின் கலாசாரத் தனித்துவத்தைப் பேணும் அவர்களுடைய சகல உரிமை

## சார்க் நாடுகளுக்கு இடையில்

# காப்புவரி தடைகள் அகற்ற துணிச்சல் வேண்டும்

-சிதம்பரம்

(டில்லி)

சார்க் பிராந்தியத்திலுள்ள நாடுகளிடையே காப்புவரி மற்றும் காப்புவரியற்ற தடைகளை அகற்றுவதில் துணிச்சலான சீர்திருத்த அணுகுமுறை தேவை என்று இந்திய மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் கூறியுள்ளார்,

புதுடில்லியில் வர்த்தக தாராளமயமாக்கல் பற்றிய அரசுத் தரப்புக் குழுவின் இரண்டு நாள் கூட்டத் தொடரை தொடக்கி வைத்துப் பேசிய அவர் மேலும் கூறுகையில் சார்க் பிராந்தியத்தை பொருளாதார ரீதியில் ஒன்று படுத்தும் முயற்சியில் முன்னேற்றம் காண அரசியல் உறுதி தேவை என்றும் வலியுறுத்தினார்.

# எட்டுத் தமிழர்கள் ரோமில் கைது

போதைப் பொருட்கள் கடத்தலில் சம்பந்தப்பட்ட எட்டுத் தமிழர்களை ரோமில் வைத்து இத்தாலிப் பொலிசார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களை கைது செய்யும் போது அவர்களிடம் இருந்து ஐந்து கிலோகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டதாக இத்தாலிப் பொலிசார் தெரிவித்தனர்.

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

விசேட பொதுக்கூட்டம் (23.5.92)

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 23 05 1992 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு சங்க தற்காலிகபணிமனையில் (பி எஸ். சேவிஸ் நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) சங்கத் தலைவர் திரு தி. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் கூட்டப்பெறும். தவறாது சகல பொதுச்சபை உறுப்பினர்

## நீதி மன்றத்திற்கு

# சட்டசபையை தட்டிக்கேட்க அதிகாரமில்லை

-ஜெயலலிதா

(சென்னை)

தமிழக சட்டப் பேரவை சரியாக செயல் படுகின்றதா? இல்லையா? என்பதல்ல பிரச்சினை. அதனைத் தட்டிக் கேட்க நீதிமன்றத்திற்கு அதிகாரமில்லை என்று நேற்று நடைபெற்ற சட்டப் பேரவையின் விசேட கூட்டத்தில் பேசிய முதல்வர் ஜெயலலிதா குறிப்பிட்டார்,

அவர் மேலும் பேசுகையில் பேரவைக்கு இறையாண்மை இருக்கிறது என்றும் இதை குந்தகப்படுத்த எந்த அமைப்பிற்கும் உரிமையில்லை என்றும் அரசியலமைப்பின் சில விதிகளைச் சுட்டிக் காட்டித் தெரிவித்தார்.

# முஸ்லிம்

ஓடி வந்து இராணுவத்திடம் நடந்ததைக் கூறியுள்ளான்

தங்களை முஸ்லிம் ஊர்காவல்படையும், இன்னும் பலரும் ஆயுதங்களுடன் வந்து கடத்திக் கொண்டு காவத்தமுனை ஊர்ப்பக்கம் கொண்டு சென்ற போது தான் மட்டும் அவர்கள் பிடியிலிருந்தும் தாக்குதலில் இருந்தும் தப்பியதாக கூறினான் ஒருமரத்தின் பின்னால் ஒளித்திருந்து அவர்கள் என்

# கட்டடம் இடிந்து வீழ்ந்து 75பேர் பலி 150பேர் காயம்

ஜம்மு - காஷ்மீர் சிறிநகரிலுள்ள லால் பஸார் பகுதியில் மூன்று மாடிக் கட்டடம் ஒன்றின் முதல் மாடி அப்படியே சரிந்து இடிந்து விழுந்ததில்

வர் திரு தி. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் கூட்டப் பெறும்; தவறாது சகல பொதுச்சபை உறுப்பினர்களும் இக் கூட்டத்துக்குச் சமுகமளித்து ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கூட்டுறவுச் சேவையில்,
செயலாளர்

(சி/4368)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 05.07.1970
உதிர்வு: 05.05.1991

### சூ. அன்ரனீஸ் குரூஸ்
(பாபு)

உறவினைத் தொலைவில் விட்டு
ஓடியே வந்த நண்பன்
எம்மையும் தவிக்க விட்டு
இன்னுயிர் நீத்தான் அந்தோ
கதறித்தான் பயனுமென்ன
கண்ணீர்தான் அவனை மீட்டுத்தருமா
நினைவிலே தீபமேற்றி அவனை நாம்
நித்தமும் பூஜிப்போமாக

- நண்பர்கள்

(2537)

வான் ஒருமரத்தின் பின்னால் ஒளித்திருந்து அவர்கள் என்னைத் தேடிவிட்டுச் சென்றதும் நான் தப்பி வந்தேன். எங்களை கடத்தியவர்களை மீண்டும் காணும் சந்தர்ப்பம் கிடைத்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும் எனவும் அச் சிறுவன் தெரிவித்தான்.

இதையடுத்து மேஜர் விக்கிரமசிங்காவின் தலைமையில் இராணுவத்தினர் ஓட்டமாவடி, மீராவோடை, வாழைச்சேனை ஆகிய கிராமங்களின் பள்ளி வாசல்களில் கடத்தப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு ஒலி பருக்கி மூலம் வேண்டுகோள்களை விடுத்துள்ளனர்.

கடத்தப்பட்ட 6 பருவப் பெண்களும் வாழைச்சேனை இந்துக்கல்லூரியில் கல்வி பயில்பவர்கள் இவர்களின் பெற்றோர் காகித ஆலையின் ஊழியர்களாவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### விளையாட்டுப்

டுப் போட்டிகளைக் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு. சூசை நேரடியாக நின்றுநடத்திக்கொண்டிருந்தார்.

இவ்விளையாட்டுப் போட்டிகளில் பிரதம விருந்தினராகத் தமிழீழக் கடற்படைத்தளபதி திரு கங்கை அமரன் கலந்து கொண்டார். வன்னிப் பிராந்தியக்கடற்படைத்தளபதி திரு தேவன் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

100, 200, 500 மீற்றர் நீச்சல்போட்டிகள், அஞ்சல் நீச்சல் போட்டிகள், கட்டுமரம் வலித்தல், சுழியோட்டம், பந்து கடத்தும் போட்டி என்பன இங்கு இடம்பெற்றன.

போட்டி நிகழ்ச்சிகளின் போது இளம்பரிதி, செல்வராஜா, கடற்புலிகளின் மகளிர் படைத்தளபதி நளாயினி, ஸ்ரனிஸ்லஸ் மாஸ்டர் ஆகியோர் உட்பட விடுதலைப் புலிகளின் பல பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விளையாட்டுப் போட்டிகள் இன்றும் தொடர்ந்து நடைபெறவுள்ளன.

லுள்ள லால் பஸார் பகுதியில்

### குளிர்பானம்

தெரிவிக்கப்படுகிறது. வின்ரோ பானத்தில் ஒரு மில்லியன் பாகத்துக்கு 654 பாகம் கலந்திருப்பதாக பகுப்பறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

உணவு மற்றும் மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரி மகாதேவன் குளிர்பானங்களின் சில மாதிரிகளைக் களுத்துறை அரசு பகுப்பாய்வு நிலையத்துக்கு அனுப்பியதை தொடர்ந்து மேற்படி அறிக்கை கிடைத்துள்ளது.

1986 க்கு முன் ஒரு மில்லியன் பாகத்துக்கு தசம் 5 பாகம் சர்க்கரின் கலப்பது அனுமதிக்கப்பட்டிருந்தது. பின்னர் இது முற்றாகத் தடை செய்யப்பட்டது. நீரிழிவு நோய் இல்லாதவர்க சர்க்கரினை உணவாகக் கொள்வதால் நீரிழிவு நோய் ஏற்படும் என மருத்துவ சட்டங்களில் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நெல்லியடிச் சந்தியில் உணவு மற்றும் மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரி கைப்பற்றிய பட்டரில் பசுப்பால் கொழுப்பு மருந்துக்கும் இல்லை என்று அந்தப் பகுப்பாய்வு அறிக்கை குறிப்பிடுகின்றது.

றின் முதல் மாடி அப்படியே சரிந்து இடிந்து விழுந்ததில் 75 பேர் பலியாகினர் இவர்களில் பெரும்பாலோர் பெண்மணிகள். 150 க்கும் அதிகமானோர் இந்த விபத்தில் காயமடைந்தனர்.

ஒரு குடும்பத்தில் ஏற்பட்டிருந்த சாவுக்காக துக்கம் விசாரிக்கச் சென்றிருந்த அனைவரும் அந்தக்கட்டடத்தில் அடித்தளத்தில் ஒன்றாகக் கூடி அமர்ந்திருந்தார்கள். இவர்களே இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்தார்கள். இச் சம்பவம் நேற்று மதியம் இடம் பெற்றது

### அலுவலகம்

டுள்ள ஒருங்கிணைந்த அஞ்சல் சேவையின்கீழ் வடமாகாணத்திற்கான பிரதி அஞ்சல் மாஅதிபர் அலுவலகம்வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப் படவுள்ளது.

இந்த அலுவலகம் யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியில் நாளை காலை 11 மணிக்குத் திறந்து வைக்கப்படும்.

பிரதி அஞ்சல் மா அதிபராக எஸ். எம். சேதுகாவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

படியான குழப்பங்களை ஏற்படுத்த நினைக்கின்றார்கள் அவர்கள் நினைப்பது என்னவென்றால், பெரும்பான்மை சிங்களவருக்கும் தமிழர்களுக்கும் இடையிலான பிரச்சினை இல்லை என்றும்.

இது தமிழ் மக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான பிரச்சினை என்பதைப் பூதாகாரமாகக் காட்ட முயல்கின்றார்கள். கருத்தியல் அடிப்படையிலும் திட்டமிட்ட செயல் வடிவம் முறையிலும் இதனைச் செய்கிறார்கள்.

அவர்களுடைய சகல உரிமைகளையும் பேணக் கூடிய விதமாக இதற்குத்தீர்வு காணலாம் அதே வேளையில் முஸ்லிம் மக்களும் முஸ்லிம் தலைவர்களும் இதனை நன்குணரவேண்டும் ஏனெனில்அரசாங்கத்தின் சூழ்ச்சி வலைக்குள் அவர்கள் அகப்பட்டிருக்கிறார்கள். மக்களுக்கிடையில் சண்டையையும் குழப்பத்தையும் ஏற்படுத்தக் கூடிய முறையில் அவர்கள் பயன்படுத்தப் படுகிறார்கள்.

இவ்வாறு லோரன்ஸ்திலகர் தெரிவித்தார்.


## விரைவில்!

## ஷ்ப்றா கிண்ணத்துக்காக

ஜொலி ஸ்ரார்ஸ் வி. க. நடத்தும்
மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்
கிரிக்கெட் போட்டித் தொடர்

விவரங்களுக்கு:

ஷப்றா
யாழ்ப்பாணம்

[சி/4369]


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 13.06.1940



இறப்பு 17.4.1991

### திருமதி திரேசா
### பிறிஜ்ஜெற் நல்லையா

திதி: 05. 05. 92

இம் மண்ணில் நாம் வாழ
எம் தாயே! வழி செய்தாய்
இப் புவியில் எம் வாழ்க்கை
தொடரும் வரையில்
உம்மை மறந்தொரு கணமும்
வாழுதல் சாத்தியமாய் இல்லை
ஆண்டவனின் பாதங்களில்
அமைதியடைய இறைஞ்சுகின்றோம்

9/6, மகேந்திரன் வீதி, - பிள்ளைகளும்
(மலர்மகள் வீதி) சத்தியநாதன் குடும்பத்தினரும்
அரியாலை.

(2532)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.